HA/3/7/28-5

அனைத்து மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள்,
அனைத்து பிரதேச செயலாளர்கள்,

**நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆண்டு இடமாற்ற உத்தரவு - 2025 தொடர்பாக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீடுகள் தொடர்பான முடிவுகளின் அறிவிப்பு**

2025ஆம் ஆண்டு இடமாற்ற உத்தரவுகளுக்கு எதிராக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீடுகள் தொடர்பாக அமைச்சக இடமாற்ற மேல்முறையீட்டுச் சபை வழங்கிய பரிந்துரைகளை எனது அனுமதியுடன் **இணைப்பு I மற்றும் இணைப்பு II** ற்கமைய தங்களிடம் முன்வைக்கின்றேன்.

02. இதன்படி, இந்த மேன்முறையீட்டுச் சபையின் முடிவுகளைக் கருத்தில் கொண்டு, எனது சம இலக்கம் மற்றும் **18.10.2024** மற்றும் **2024.11.04** ஆம் திகதியிட்ட கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்ட இடமாற்றங்கள் பின்வருமாறு செயல்படுத்தப்பட வேண்டும். இதனை தங்கள் அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து, குறித்த நாளில் புதிய பணியிடத்தில் கடமையினை பொறுப்பேற்க அவர்களை அறிவிக்குமாறு தயவாய் அறியத்துருகின்றேன்.

**I.** கிராம உத்தியோகத்தர் இடமாற்றம் - **01.01.2025** ஆம் திகதி தொடக்கம் அமலுக்கு வருகிறது.

**II.** நிர்வாக கிராம உத்தியோகத்தர் இடமாற்றம் –பெயரிற்கு முன்னால் நடைமுறைக்கு வரும் திகதி குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அன்றைய திகதியிலிருந்தும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் **01.01.2025**ஆம் திகதி தொடக்கம் அமலுக்கு வரும்.

03. சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் புதிய பணியிடத்தில் கடமையினை பொறுப்பேற்க இயலுமான வகையில் குறித்த திகதியில் தற்போதைய பணியிடத்தில் இருந்து அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறியத்தருவதோடு இவ் இடமாற்றம் தாமதமின்றி குறித்த திகதிகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அறியத்தருகின்றேன்.

04. வருடாந்த இடமாற்றக் கொள்கையின்படி மேற்கொள்ளப்படும் இந்த இடமாற்றங்களுக்கு பயணச் செலவுகள் அல்லது ஏனைய கொடுப்பனவுகள் எதுவும் செலுத்தப்பட மாட்டாது என்பதை மேலும் அறியத்தருகின்றேன்

டி.டி.சி.அத்துகோரல
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
(கிராம உத்தியோகத்தர் நிர்வாகம்)

ஒப்பம் -எஸ்.அலோகா பண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு